**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**<u>OS No.25/2022</u>**

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 7-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of DW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜன் | தந்தை பெயர் | கணேசன் |
| கிராமம் | கந்தர்வக்கோட்டை | தாலுகா | கந்தர்வக்கோட்டை |
| வயது | 59 | தொழில் | வேலை இல்லை |

நாள் : 07.11.2025

பி.சா.2

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1) யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார், எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தை நான் பிரதிவாதியிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அங்கு இருப்பதால் எனக்கு தெரியும். இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சுரேஷ்பாபு என்று நினைக்கிறேன். எனக்கும் பிரதிவாதி குடும்பத்தாருக்கும் சுமார் 40-50 ஆண்டுகாலமாக பழக்கம் என்றால் நான் அந்த தெருவில் குடியிருப்பதால் பழக்கம் ஆகும். நான் அந்த தெருவில் குடியிருப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆதார் அடையாள அட்டை உள்ளது. தாவா சொத்திற்கான கிரைய ஆவணம் வாதி சுரேந்திர பாபுவின் தாத்தா பெயரில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

2) பிரதிவாதி இந்த வழக்கில் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது, அவர் சுமார் 20-30 வருடமாக குடியிருந்து வருகிறார். என் மகன் அ.தி.மு.க. கட்சியில் பொறுப்பில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி மகனும் அதே கட்சியில் மாவட்ட பொறுப்பில் உள்ளார் என்றால் சரிதான். இருவரும் ஒரே கட்சியில் இருந்து வருவதால், பிரதிவாதியின் மகன் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தாவா சொத்தில் ஆஸ்பெஷ்டாஸ் கூறை போடப்பட்டு மின் இணைப்பு உள்ளதாக விபரங்களை பிரதிவாதி அவரது எதிர் வழக்குரையில் கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி தான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றாலும் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருவதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்கில் யாருடைய இடம் உள்ளது என்றால் கலியமூர்த்தி இடம் உள்ளது.

3) தாவா சொத்திற்கு எந்த திசையில், பிரதிவாதியின் மகனின் சித்தப்பா வசித்து வருகிறார் என்றால் மேற்கில் வசித்து வருகிறார். வாதியின் தாத்தா கந்தர்வக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தாத்தா கந்தர்வக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு தானமாக இடம் கொடுத்துள்ளார் என்றால் நான் கேள்விப்பட்டுள்ளேன். வாதியின் முன்னோர்கள் மற்றும் வாதி வெளியூரில் வசிப்பதை பயன்படுத்திக்கொண்டு, பிரதிவாதி பொய்யாக கட்சி செய்து வருகிறார் என்றாலும் அதற்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தைப்பொறுத்து பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணம் பட்டா எதுவும் உள்ளதா என்பதை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**